DEPOSITION OF WITNESS.

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT COURT, SIVAGANGAI

S.C.No.118/2014

PROSECUTION WITNESS No - PW- 3

| | | | |
|---|---|---|---|
| Name : | சுதாகரன் | Caste: | |
| Father Name : | குருபாதம் | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.

4 வது, 6 வது மற்றும் 9 வது எதிரிகள் நீதிமன்றத்தில் நேரில் ஆஜர். 2 வது எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்படவில்லை.

**<u>முதல் விசாரணை :</u>**

எனக்கு சொந்த ஊர் ஒய்யவந்தான் பேச்சாத்தாக்குடி கிராமம் ஆகும். இந்த வழக்கில் இறந்து போன ஜெகசுப்ரமணியன் (எ) பழனி எனக்கு தெரியும். அவர் எனது நெருங்கிய உறவினர் ஆவார். இவ்வழக்கின் எதிரிகள் அனைவரையும் எனக்கு தெரியும். நான் ஐடிஐ வரை படித்து தற்போது வேலை விஷயமாக சிங்கப்பூரில் தங்கி பணியாற்றி தற்போது விடுமுறையில் இங்கு வந்துள்ளேன். கடந்த 13.06.2000 ம் ஆண்டில் நண்பகல் 01.45 லிருந்து 02.00 மணியளவில் நான் எங்கள் ஊரில் என் உறவினர் சண்முகம் வீட்டில் உட்கார்ந்து இருந்த போது திடீரென சத்தம் கேட்டது அப்போது வந்த சிலர் 10, 15 பேர் வந்து என் மண்டையில் மண்வெட்டி கட்டையால் அடித்ததனர். அப்போது ஒருவர் என் வயிற்றில் இடது புறத்தில் கத்தியாலும் இடது புறத்தில் நெஞ்சு பகுதியிலும் தலையின் பின்புறத்திலும் அடித்தார்கள். நான் மயக்கம் போட்டு விழுந்ததால் நான் இறந்துவிட்டதாக நினைத்து அவர்கள் அனைவரும் போய்விட்டார்கள். அவர்கள் வந்தவுடன் என் பின்புறத்தில் தாக்கியதால் அவர்கள் யார் என்று எனக்கு அடையாளம் தெரியவில்லை. அதற்குப்பின் என்னை சிவகங்கை அரசு மருத்துவமனையில் சேர்த்து அன்றே எனக்கு மயக்கம் தெளிந்து எனக்கு

நினைவு வந்து என் உடல்நிலை மோசமாக இருந்ததால் மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார்கள். பிறகு என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். அப்போது தான் என் மாமா பழனி என்பவர் இறந்த விவரம் தெரிந்து கொண்டேன். இந்த விவரத்தை தான் போலிசார் விசாரணையில் நான் சொன்னேன். நான் இது தவிர இவ்வழக்கிற்கு மூல காரணமாக இருக்கும் வேறு எதாவது விவரங்களை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் நான் சொல்லவில்லை. இவ்வழக்கில் போலிசார் என்னை விசாரித்தப்போது எந்த இடத்தில் வைத்து யார் யார் என்னென்ன ஆயுதங்களால் என்னை தாக்கினார் என்றும் அதை போல் என் மாமா பழனியை தாக்கினார் என்றும் தனிதனியாக நான் விளக்கம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி, குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதி வழங்கப்பட்டது. அனுமதியின் பேரில் அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் இவ்வழக்கு குறித்து என்னை விசாரித்த போது நான் ஐடிஐ படித்துவிட்டு வேலையில்லாமல் எங்கள் ஊரிலே வேலைக்கு முயற்சி செய்து கொண்டிருந்தேன் என்றும் இவ்வழக்கில் 1வது எதிரியும் இறந்து போனவருமான பன்னீர்செல்வம் என்பவர் எங்கள் பஞ்சாயத்தில் தலைவராக இருந்தபோது கையாடல் செய்ததாகவும் அதனால் அவர் பதவிநீக்கம் செய்யப்பட்டார் என்றும் அதற்கு இவ்வழக்கில் இறந்து போன என் மாமா ஜெகசுப்ரமணியன் (எ) பழனி தான் காரணம் என்று 1வது எதிரி பன்னீர் என்பவர் என் மாமா மீது முன்விரோதம் வைத்திருந்தார் என்றும் மேலும் மேற்படி பன்னீர் தான் தலைவராக இருந்த காலத்தில் தனக்கு சொந்தமான செங்கல்சூளைக்கு ஊர் பொது பயன்பாட்டில் இருந்த சமுதாய கிணற்றில் மோட்டர் மூலம் தண்ணீர் எடுத்து பொதுமக்களை பயன்படுத்தவிடாமல் செய்து தனது சொந்த

உபயோகத்திற்கு பயன்படுத்தினார் என்றும் இது தொடர்பாக என் மாமா பழனி பஞ்சாயத்தில் பன்னீர் மீது குற்றம் சுமத்தினார் என்றும் இந்த சூழ்நிலையில் கடந்த 13.06.2000ம் அன்று பகல் 12.40 மணிக்கு சிவகங்கையில் இருந்து ஒய்யவந்தான் செல்லும் அரசு பேருந்தில் என் மாமா பழனியுடன் சேர்ந்து நானும் வந்தேன் என்றும் என் மாமாக நிறைய சாமான்கள் வாங்கி கொண்டு வந்தார் என்றும் நாங்கள் வந்த வண்டி மதியம் சுமார் 01.15 மணியளவில் ஒய்யவந்தான் பேருந்து நிறுத்தத்தில் நின்றது என்றும் நானும் என் மாமாவும் பேருந்தை விட்டு இறங்கினோம் என்றும் அப்போது அங்கே வந்த என் மாமாவின் மனைவி சீதா என்பவரும் சீதாவின் தந்தை காங்கயவேலு என்பவர் பழனி வாங்கி வந்த சாமான்களை தாங்கள் வாங்கி கொண்டு சுமார் 50 அடி சென்றார்கள் என்றும் அவர்கள் முன்னே செல்ல நானும் எனது மாமாவும் கண்மாய் கரையை ஒட்டி சென்று கொண்டிருந்தபோது அங்கிருந்து புளிய மரத்தில் மறைந்திருந்த 1வது எதிரி பன்னீர் செல்வம் அவரது மகன் காளீஸ்வரன், காளீஸ்வரன் தம்பி ராமு ஆகியோர்கள் கைகளில் அரிவாளுடனும் பன்னீர் செல்வத்தின் தம்பிகள் மணி, முத்து ஆகியோர்கள் கைகளில் கத்தியுடனும் சுகுமாரின் மகன் பச்சைப்பிள்ளை சைக்கிள் செயினுடனும் பன்னீர் செல்வத்தின் தங்கை மகன் ஸ்டாலின் கையில் உருட்டுக் கம்புடனும் எதிரிகள் கோபுவும் அய்யப்பனும் தடியுடன் வந்து என்னையும் என் மாமா பழனியையும் வழி மறைத்து பன்னீர் செல்வம் பழனியை பார்த்து என்னை பஞ்சாயத்து தலைவர் பதவியில் இருந்து நீக்குவதற்கு காரணமாக இருந்தாய் அப்போதே உன்னை கொல்லாமல் விட்டுவிட்டேன் இப்போது கிணற்றில் தண்ணீர் எடுப்பதற்கும் கிராமத்தில் புகார் கொடுக்கிறாய் இனியும் உன்னை கொல்லாமல் விட்டால் என் வாழ்க்கையையே அழித்துவிடுவாய் என்று கூறி தன்னுடன் வந்தவர்களை பார்த்து இவனை வெட்டிக்கொல்லுங்கடா என்று ஆவேசமாக கத்தியபடி தன் கையில் வைத்திருந்த அரிவாளால் பழனியை ஓங்கி வெட்ட பழனி தடுத்ததில் இடது கை பெருவிரலில் இரத்த காயம் ஏற்பட்டது என்றும் மறுபடியும் வெட்டியதில்

பழனியின் இடது கழுத்தில் காயம் ஏற்பட்டது என்றும் காளீஸ்வரன் தலையை நோக்கி வெட்டியதில் பழனி தடுத்ததால் இடது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும் மறுபடியும் தலையின் நடுபகுதியில் காளீஸ்வரன் வெட்டினார் என்றும் ராமு வெட்டியதில் பழனியின் இடது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும் மீண்டும் அவர் பின் கழுத்து, வலது தோள்பட்டை ஆகியவற்றில் அரிவாளால் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றும் மணி என்பவர் தான் வைத்திருந்த கத்தியால் பழனியின் வலது மார்புக்கு கீழ், வலது விலா, வயிற்றில் வலது மத்திய பகுதி, வலது தோள்பட்டைக்கு கீழ் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும் முத்து கத்தியால் பழனியின் தொப்புளுக்கு கீழ் குத்தி காயம் மற்றும் முதுகு இடது புற பகுதியில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும் இடது பக்க இடுப்புக்கு கீழ் இரண்டு முறை குத்தினார் என்றும் விலாவிலும் குத்தினார் என்றும் பச்சைப்பிள்ளை சைக்கிள் செயினால் கழுத்துக்கு கீழ் முதுகு பகுதியில் அடித்தார் என்றும் தொடையிலும் அடித்தார் என்றும் மற்ற எதிரிகளான ஸ்டாலின், கோபி, அய்யப்பன் ஆகியோர்கள் தங்கள் கைகளில் வைத்திருந்த உருட்டு கட்டை மற்றும் தடியால் மாறி மாறி அடித்தார் என்றும் அதை தடுக்க நான் எனது பெரியப்பா காங்கயவேலு அவரது மகள் சீதா ஆகியோர் முயற்சித்தோம் என்றும் எங்களை அவர்கள் கைகளில் வைத்திருந்த ஆயுதங்களைக் காட்டி கிட்டே வந்தால் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள் என்றும் நான் நெருங்கி சென்ற போது பன்னீர் செல்வம் என் தலையில் வலது பக்கத்தில் வெட்டினார் என்றும் எதிரி மணி என்னுடைய வலது இடுப்பிலும் வலதுபக்க பின்புற விலாவிலும் குத்தினார் என்றும் முத்து கத்தியால் என் முன்கையிலும், இடது பக்க நெஞ்சிலும் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், பின்பு இத்தோடு செத்து தொலைந்து போடா என்று சத்தம் போட்டவாரு மேற்கு நோக்கி ஆயுதங்களோடு சென்றுவிட்டார் என்றும் அப்போது எங்களின் அலரல் சத்தம் கேட்டு என் அப்பா குருபாதம் எங்கள் அய்யனார் மகன் மயில்வாகனம் மற்றும் சூரியன், பழனியின் மூத்த மனைவி தாழையம்மாள்

ஆகியோர் அங்கு வந்தார்கள் என்றும் என்னை சிகிச்சைக்காக மதியம் 02.00 மணிக்கு சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு சேர்த்தார் என்றும் அதன் பின் மேல்சிகிச்சைக்காக மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சேர்த்தார் என்றும் கடந்த 14.06.2000ம் தேதி மதுரை அரசு மருத்துவமனையில் வைத்து காளையார்கோவில் போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும் நான் இந்த விவரங்களை போலிசாரிடம் சொன்னேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் இறந்து போன பழனி மற்றும் எதிரி வகையினர் உள்ளூர்காரர்கள் என்பதால் எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இவ்வழக்கில் காயம்பட்ட நான் சொன்ன செய்திகளை மறைத்து எதிரிகளை காப்பாற்ற வேண்டும் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>

மூல அமர்வு வழக்கு எண்.5/2005ல் நான் சாட்சியாக இருந்தும் அந்த வழக்கில் நான் சாட்சி சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். ஒய்யவந்தான் பேருந்து நிறுத்தத்திற்கும் எங்கள் ஊருக்கும் இடையே சுமார் 1 கி.மீ தூரம் இருக்கும் என்றால் சரிதான். எங்கள் கிராமித்திலிருந்து கண்மாய்க்கரை இடையே சுமார் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 900 மீ இருக்கும். நான் சம்பவ தினத்தன்று சிவகங்கைக்கு செல்லவில்லை என்றும் மேலும் இவ்வழக்கில் இறந்து போன பழனி என்பவருடன் பேருந்தில் வந்து இறங்கவில்லை என்று சொன்னால் சரிதான். பேருந்து நிறுத்தத்தில் காங்காயவேலு, சீதா ஆகியோர்கள் நின்று சமான்களை எடுத்து வந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் இறந்து போன பழனி என்பவருடன் பேருந்தில் இருந்து இறங்கி கண்மாய்கரை வழியாக செல்லவில்லை என்றால் சரிதான். நான், காங்காயவேலு, சீதா, தாழையம்மாள் ஆகியோர்கள் வீட்டில் இருந்தபோது தான் இவ்வழக்கு சம்பந்தமாக அலரல் சத்தம் கேட்டதா என்றால்

அப்போது என் உறவினர் வீட்டில் நான் மட்டும் தான் இருந்தேன். காங்காயவேலு, சீதா, தாழையம்மாள் ஆகியோர்கள் என்னுடன் இல்லை. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் கண்மாய்கரைக்கு சம்பவ சமயத்தில் நான் செல்லவில்லை என்றும் இவ்வழக்கில் இறந்து போன பழனி என்பவருக்கு யாரால் எங்கு வைத்து எப்படி காயம் ஏற்பட்டது என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரிதான். நான் கண்மாய் பக்கம் அலறல் சத்தம் கேட்டதாக சொல்லப்படும் அதே நேரத்தில் உறவினர் வீட்டில் இருந்த என்னை இனம் தெரியாத நபர்கள் தாக்கினார்கள் என்றால் சரிதான். அந்த அலறல் சத்தம் கேட்ட நேரத்தில் காங்காயவேலு, சீதா, தாழையம்மாள் ஆகியோர்கள் அவர்கள் வீட்டிலிருந்து கண்மாய்கரையை நோக்கி ஓடினார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை.</u>** இல்லை

சாட்சி கூறியதை என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டி, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

KANNAYEERAM ARIVOLI

Digitally signed by KANNAYEERAM ARIVOLI
Date: 2026.03.04 15:57:30 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
சிவகங்கை